**செ. கு. எண்**:381 **நாள்**:28.10.12

மாண்புமிகு தமிழகமுதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 28.10.2012

தேனி மாவட்டம், சின்னமனூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.தெய்வேந்திரன் அவர்கள் 23.10.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், மல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.பச்சமுத்து அவர்கள் 24.10.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கொடுங்கையூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C.பழனி அவர்கள் 25.10.2012 அன்று தனது இருச்சக்கர வாகனத்தில் வியாசர்பாடி, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது, நிலை தடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.ஜான்சன் அவர்கள் உடல்நலக் குறைவால் 25.10.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.ரவி அவர்கள் உடல்நலக் குறைவால் 26.10.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. தெய்வேந்திரன் திரு. பச்சமுத்து, திரு, ஜான்சன், தலைமைக் காவலர்கள் திரு. பழனி மற்றும் திரு. ரவி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. A.தெய்வேந்திரன், திரு. A.பச்சமுத்து, உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. S.ஜான்சன், தலைமைக் காவலர் திரு. ரவி மற்றும் சாலை விபத்தில் காலமான தலைமைக் காவலர் திரு. C.பழனி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**